1971 டிசம்பர் 18]

(4) கவன ஈர்ப்பு

(அ) இராஜபாளையம் அழகப்பா பஞ்சாலை வேலைநேர மாற்றத்தால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

"இராஜபாளையம் அழகப்பா காட்டன் மில்ஸ் வாரத்தில் ஏழு நாட்களும் தொடர்ந்து ஓடுவதற்குத் தமிழக அரசு அண்மையில் அனுமதி வழங்கியிருப்பதைப் பயன்படுத்தி, வேலை நேர மாற்றம் (shift) ஏற்படும்போது தொழிற்சாலைச் சட்டத்திற்கு விரோதமாக வேலைக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவதால் தொழிலாளர்களிடையே எழுந்துள்ள நெருக்கடியான நிலை குறித்து" அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இராஜபாளையம் நாகம்மை நகரிலுள்ள அழகப்பா பஞ்சாலை நிர்வாகம், தொழில் தகராறுகள் சட்டத்தின் 9-ஏ பிரிவின்கீழ் 17—8--1971-ஆம் நாளிட்ட அறிவிப்பு ஒன்றைக் கொடுத்து, அந்த ஆலை 9--9--1971-லிருந்து வாரத்தின் ஏழு நாட்களிலும் வேலை செய்யும் என்று அறிவித்தது. ஆலை நிர்வாகத்தின் சார்பில், ஆலை கடந்த இரண்டு ஆண்டுகளாக நட்டத்தில் நடந்து கொண்டிருந்ததாகவும், நிலைமையிலிருந்து மீளும் பொருட்டு வாரத்தில் 7 நாட்களும் வேலை செய்யும் நிலைமை மேற்கொள்ள வேண்டியதாயிற்று என்றும் கூறப்பட்டது.

மதுரையிலுள்ள இராமநாதபுரம் மாவட்டத் தொழிலாளர் நல அதிகாரியின் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, இந்த மாற்றத்தினாலே தொழிலாளர்களின் நலன்களுக்கு முரணான வகையில் எதுவுமில்லையென்றும், ஏனெனில், 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித் துறைகளினின்றும் இது மாறுபட்டிருக்கவில்லை என்றும் நிர்வாகம் தெரிவித்தது. மேலும் ஆலையில் வாரத்தின் 7 நாட்களிலும் வேலை நடைபெறுவதின் விளைவாக அதிக வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்றும் நிர்வாகம் தெரிவித்தது.

இருப்பினும், ராஜபாளையம் ஆலைத் தொழிலாளர் சங்கம், (அனைத்திந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ்) செய்யக் கருதப்பட்டுள்ள மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. தொழிலாளர்

[திரு. என். வி. நடராசன்]

நல அதிகாரி தனது சமாசப் பேச்சு முறிந்தது குறித்து அறிக்கையை அனுப்பினர்.

இதற்கிடையே, தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் இராஜபாளையம், அழகப்பா பஞ்சாலை நிர்வாகத்துக்கும், அந்த ஆலைத் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற மூன்று தொழிற்சங்கங்களில் தேசியப் பஞ்சாலைத் தொழிற்சங்கம், திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ஆகிய இரு சங்கங்களின் தொழிலாளர்களுக்கும் இடையே 5—10—1971-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதற்கேற்ப அந்த ஆலையில் 9—10—1971-லிருந்து வாரத்துக்கு 7 நாள் வேலை முறையைக் கொண்டுவர ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்வரும் காரணங்களை முன்னிட்டு அரசு இந்தகராறை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட மறுத்துள்ளது. "தொழிலாளர்கட்குச் சுழல் முறையில் வார விடுமுறை அனுமதிக்கப்படுகின்றவரை, வாரத்தில் 7 நாட்களிலும் ஆலையை நடத்தும் செயற்குறிப்பு தொழிற்சாலைச் சட்டத்தின் விதித்துறைகளை ஒட்டியதாகும், இந்த மாற்றத்தில் தொழிலாளர்களின் நலன்களுக்கு மாறானது எதுவுமில்லை, இந்த மாற்றத்தைக் கொண்டு வருவது உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் உயர்த்தும்".

கூட்டுறவுத் துறையில் உள்ளவையுட்பட இம்மாநிலத்தின் பல பஞ்சாலைகளில் வாரத்தில் 7 நாள் வேலை நடைமுறையில் உள்ளது, தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் பெருக்குவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும்.

ஷிப்ட் (முறைமாற்றுப்பணி) மாறும்போது தொழிற்சாலைச் சட்டம் மீறப்படுகிறது என்னும் கருத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய மீறுதல் எதுவுமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கட்கு இருக்கக் கூடிய ஒரேவொரு குறை ஷிப்ட் மாறும்போது அவர்கட்கு ஒரு ஷிப்டுக்கும் அடுத்த ஷிப்டுக்கும் இடையே 7 மணிநேர இடைவெளிதான் உள்ளது என்பதாகும். இதுபற்றி ஆராய்ந்து இந்தக் குறையினைக் களையும் நடவடிக்கை ஏதாவது எடுக்கமுடியுமாவெனக் கூறுமாறு தொழிற்சாலைகள் தலைமை இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இருப்பினும், கோயம்புத்தூரில் பிற ஆலைகளில் இந்த முறை (வாரத்துக்கு 7 வேலைநாட்கள்) நடைமுறையில் உள்ளது என்பதையும் இதனால் இந்த ஆலைகளில் எவ்வித இடர்ப்பாடும் ஏற்படவில்லை என்பதையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்த மூன்றுவது ஷிப்டை நிரந்தரமாக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதுபற்றிப் பரிசீலிக்கப் படும்.